# வேதகாலம்

## வரலாறு - பருவம் 2 - பாடம் 1

1] இந்தியாவில் ஆரியர்கள் குடியேறிய பகுதி - ஆரிய வர்த்தம்

2] கைபர், போலன் கணவாய்கள் வழியாக ஆரியர்கள் இந்தியாவிற்குள் நுழைந்தனர்.

3] ஆரியர்கள் தங்கள் இனப்பெரியோர் பாடிய வேண்டுதல்களை வேதங்களாக தொகுத்தனர். எனவே வரலாற்றில் இக்காலகட்டம் வேத காலம் என அழைக்கப்படுகிறது.

4] வேதகாலம் இரு பிரிவாக பிரிக்கப்படுகிறது.

- முந்தைய வேதகாலம் – [கி.மு 1500 - கி.மு 1000]
- பிந்தைய வேதகாலம் – [கி.மு 1000 - கி.மு 600]

5] முந்தைய வேதகாலம் = ரிக் வேதகாலம்

6] சப்த சிந்து - ஏழு நதிகள் பாயும் நிலம்

7] ரிக் வேதகால ஆரியர்கள் வாழ்ந்த பகுதி - பஞ்சாப்-இல் இருந்த சப்த சிந்து

8] சமுதாயத்தின் அடிப்படை அலகு - குடும்பம்

பல குடும்பங்கள் - கிராமம் - கிராமத்தின் தலைவர் = கிராமணி

பல கிராமங்கள் = விசு = தலைவர் "விசுவபதி"

பெரிய ஆட்சி அமைப்பு = ஜனா = தலைவர் ராஜன்

ராஜ்யத்தில் வாழ்ந்த மக்கள் = பிரஜைகள் ( அரசர் = ப்ரஜாபதி )

மஹாஜனபதம் = பல சிற்றரசுகள் இணைந்த பெரிய அரசு ஆகும்.

9] சபா - முதியோர் அவை.

சமிதி - ஊர் மக்களின் பிரதிநிதிகளை கொண்ட அவை.

10] முந்தைய வேதகால பெண் கவிஞர்கள்

- விஷ்வவாரா,
- அபலா,
- கோசா,
- லோப முத்ரா

11] முந்தைய வேத காலத்தில் விதவைகள் மறுமணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

12] முந்தைய வேத காலத்தில் கால்நடை வளர்ப்பு, வேளாண்மை முக்கிய தொழில்கள்.

13] முந்தைய வேத காலத்தில் நடத்தப்பட்ட யாகங்கள் - அஸ்வமேதம், இராஜசூயம், வாஜபேயம்.

14] சாம, யஜுர் , அதர்வண வேதங்களின் காலம் = பிற்பட்ட வேதகாலம்.

15] பிராமணங்கள், உபநிடதங்கள், ஆரண்யங்கள் எழுதப்பட்ட காலம் = பிற்பட்ட வேதகாலம்.

16] பிற்பட்ட வேதகாலம் [கி.மு 1000 - கி.மு 600]

- இரும்பு அதிக அளவில் பயன்படுத்தப்பட்டது.
- கால்நடைகளின் எண்ணிக்கையை வைத்து செல்வ நிலை மதிப்பிடப்பட்டது.
- கணவன் இறந்தால் மனைவி உடன்கட்டை ஏறும் வழக்கம் நடைமுறையில் இருந்தது.
- கார்க்கி, மைத்ரேயி - கல்வியில் சிறந்து விளங்கிய பெண்கள்.

17] நிஷ்கா, ஸ்வர்ணா , சதமானா = பிற்பட்ட வேத காலத்தில் புழக்கத்தில் இருந்த தங்க வெள்ளி நாணயங்கள்.

18] தனுர்வேதம் = போர்க்கலை